Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 180

வியாழக்கிழமை 25 மே 2023

வைகாசி 11 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054




## விகாரைக்கு எதிராக தொடரும் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 25
வலி.வடக்கில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் நேற்றும் தொடர்ச்சியாக நடைபெற்றது. »09

## ஜூலை மாதம் முதல் மின்கட்டணம் மாறும்

மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 25
ஜூலை மாதம் முதலாம் திகதியுடன் பல துறைகளுக்கான மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்று நாடாளு »11

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர்

## ஜனகவுக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்றில் நிறைவேற்றம்!

கொழும்பு, மே 25
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவைப் பதவி நீக்குவதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. »11



## திருக்கேதீச்சர ஆலய பெருந்திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 25
வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீச்சர ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. »09

முத்தையன்கட்டில் கைதான

## போலிச் சாமியாரால் பலர் துஷ்பிரயோகம்

விசாரணையில் வெளிவரும் 'பகீர்' தகவல்கள்

முல்லைத்தீவு, மே 25
சூனியத்தை நீக்குவேன் என்று கூறிப் பெண்களுடன் சில்மிஷம் செய்த குற்றச்சாட்டில் »11

# அமைதிப் போராட்டங்களை பொலிஸார் தடுக்கமுடியாது!

தையிட்டி விவகாரத்தில் நீதிமன்று கட்டளை

பொலிஸாருக்கும் கடும் "டோஸ்"

யாழ்ப்பாணம், மே 25
அமைதியான முறையில் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று சுட்டிக்காட்டிய மல்லாகம் நீதிமன்றம், தனியார் காணிக்குள் நின்று சட்டவிரோத விகாரைக்கு எதிராக ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் சர்வாதிகாரப் போக்குடன் நடந்துகொண்ட பலாலிப் பொலிஸாருக்குக் கடும் தொனியில் எச்சரிக்கையும் விடுத்துள்ளது. »11

## ஆசிரியர் மீது மாணவன் தாக்குதல்

யாழ்., மே 25
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியிலுள்ள »11

## எழுதுமட்டுவாழில் விபத்து; சம்பவ இடத்தில் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், மே 25
எழுதுமட்டுவாழில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் நடந்த விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இரு சிறுவர்கள் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். »09

## கஜேந்திரன் எம்.பியின் கைபேசி "ஆட்டையா?"

யாழ்., மே 25
நேற்றுமுன்தினம் பொலிஸார் பெறுமதிமிக்க கைபேசியைப் பறித்துச் சென்றிருந்த »09

## நாடாளுமன்றில் வாக்களித்த ஹரீம் எம்.பி.

கொழும்பு, மே 25
சட்டவிரோதமாக நாட்டுக்குள் »11

குளிர்பானப் போத்தல்களின்

## காலாவதித் திகதியில் மாற்றம் ரூபா 110,000 தண்டம்

யாழ்ப்பாணம், மே 25
குளிர்பானப் போத்தல்களின் காலாவதித் திகதியில் மாற்றம் ஏற்படுத்திய விநியோகஸ்தருக்கு ஒரு இலட்சத்துப் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிமன்றம், »11

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு

## தொல்லியல் திணைக்கள ஆக்கிரமிப்பை நேற்று வெளிப்படுத்தினார் சிறீதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 25
தொல்பொருள் திணைக்களத்தால் வடக்கு- [illegible] படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் சமகால நிலைமை தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதானிகளுக்கும், »09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் இறந்தவர்களை அஞ்சலிக்க பொதுத்தூபி

## ஜனாதிபதி ரணில் யோசனை



**கொழும்பு, மே 25**

**இலங்கையில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மைகள் அல்லது குடியியல் குழப்பங்களின் விளைவாக உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் நினைவகமொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.**

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை, குடியியல் குழப்பங்கள், அரசியல் அமைதியின்மைகள், இன மோதல்கள் மற்றும் நீண்டகால ஆயுதமோதல்கள் போன்ற வரலாறுகளுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், குறித்த காலப்பகுதியில் அனைத்து இன, மத, தொழில் மற்றும் ஏனைய தனித்துவங்களைக் கொண்ட பிரஜைகள் அவ்வாறான அபாயங்களுக்கும் சொல்லொணாத் துயரங்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் மூலம் நினைவேந்துகை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மூலம் கூட்டாக இழப்புக்களை வழங்குவதானது அழுத்தங்களுக்கு உள்ளாகிய நபர்களின் சமூகங்களுக்கும் குழுக்களுக்கும் ஏதுவான வகையிலான உரிமை என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கையில் ஆயுதமோதல்கள், அரசியல் அமைதியின்மைகள் அல்லது குடியியல் குழப்பங்களின் விளைவாக உயிர்நீத்த பொதுமக்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளிட்ட அனைத்து நபர்களையும் நினைவு கூருவதற்கான நினைவகத்தை நல்லிணக்கம் மற்றும் மீளிணைப்பின் அடையாளமாக கொழும்பு நகரில் பொருத்தமான இடமொன்றில் அமைப்பதற்கு ஜனாதிபதி ரணில் முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம-இ)

*மன். நெடுங்கண்டலில்*

# முரண்பாடுகளாலேயே புலவுப் பங்கீடு தாமதம்!

**மன்னார், மே 25**

மன்னார் - நெடுங்கண்டல் பகுதியில் சிறுபோகம் மேற்கொள்ள புலவுக் காணிகளை பிரித்துக் கொடுக்கும் நடவடிக்கையின்போது விவசாயிகளிடையே முரண்பாடுகள் காணப்படுவதாலேயே அளவீட்டுப் பணியில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என கமத்தொழில் அபிவிருத்தி உதவி ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மன்னாரில் பிரதான குளமாக விளங்கும் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் இந்த ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அங்கு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு 140 விவசாயிகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் புலவுக் காணிகள் இன்னமும் சரியான முறையில் அளந்துகொடுக்கப்படவில்லை. அதனால் சிறுபோகத்தில் ஈடுபடமுடியாத நிலை உருவாகியுள்ளது என நெடுங்கண்டல் கமக்காரர் அமைப்பால் முறையிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கமத்தொழில் அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் வினவியபோது,

புலவுகளைப் பிரித்துக் கொடுப்பதில் ஈடுபட்டபோது கணிப்பீடுகளில் விவசாயிகளிடையே முரண்பாடுகள் காணப்பட்டதாலேயே அளவீட்டுப் பணிகளில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து புலவுக்காணிகளை பிரித்துக் கொடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார். (ச-60)

# யாழ். நகர உணவகத்தில் பழுதடைந்த உணவுகள்!

## உரிமையாளர் மீது வழக்குப்பதிவு

**யாழ்ப்பாணம், மே 25**

யாழ். நகரப் பகுதியிலுள்ள அசைவ உணவகமொன்றில் பழுதடைந்த உணவுகளை விற்பனை செய்த உணவக உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

உணவகத்தில் பழுதடைந்த உணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன என பொதுமக்களால் யாழ். மாநகர சுகாதாரப் பிரிவினருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.பொது சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழு, உணவகத்தை திடீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தியது. சோதனையின்போது தொழிலாளர் இருவர் மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் இருந்தமை மற்றும் மனித பாவனைக்கு உதவாத கோழி இறைச்சி, ரொட்டி என 20 கிலோ உணவுப் பொருள்களும் பழுதடைந்த பழங்களும் கைப்பற்றப்பட்டன.

அதனையடுத்து உணவக உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு உணவக உரிமையாளர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த மேலதிக நீதிவான் சான்றுப் பொருள்களை அழிக்குமாறு உத்தரவிட்டதுடன், கடை உரிமையாளரை ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார். வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ச-26)

*சங்கிலியன் பூங்காவில்*

# சிறுதொழில் உற்பத்திகளுக்கான வாராந்த சந்தை பிரதி ஞாயிறில்

**யாழ்ப்பாணம், மே 25**

யாழ்.மாவட்டத்தில் சிறுதொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு விசேட சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க வாராந்த சந்தை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கடந்த மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த வாராந்த சந்தை, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 7 மணிமுதல் மாலை 6 மணிவரை நடத்தப்படுகிறது.

சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் இந்த வாராந்த சந்தை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்துக்கே உரிய பொருள்களை குறைந்த விலையில் மக்கள் கொள்வனவு செய்யமுடியும் என யாழ். மாவட்ட சிறுதொழில் முயற்சி பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-125)

# மாணவர் பஸ் 'சீசன்' கட்டணம் உயரும்!

**கொழும்பு, மே 25**

இலங்கைப் போக்குவரத்துச்சபையால் பாடசாலைக்கான பருவச்சீட்டுக் கட்டணத்தை 25 முதல் 30 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பாடசாலை பருவச்சீட்டுக்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான பருவச் சீட்டுக் கட்டணத்தையும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டண அதிகரிப்புக்கு அமையவே, பாடசாலை போக்குவரத்து பஸ் சேவை நீக்கப்படுமா அல்லது தொடர்வதா? என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# இறந்தோருக்குப் பொதுத்தூபி வெட்கப்படவேண்டிய செயல்!

## வீரசேகர எதிர்ப்பு

**கொழும்பு, மே 25**

நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த படையினரையும், விடுதலைப் புலிகளையும் ஒன்றிணைத்து நினைவுகூரும் வகையில் தூபி அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை கோமைத்தனமானது. அரசாங்கத்தின் தீர்மானத்தையிட்டு வெட்கமடைகிறேன். தீர்மானம் திருத்திக் கொள்ளப்படவேண்டும் என ஆளும் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தத்தில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் வகையில் 'நினைவுத் தூபி' ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அறிய முடிகிறது. இதனை நல்லிணக்கம் என்று குறிப்பிடக் கூடாது. கோழைத்தனமான செயற்பாடு என்றே குறிப்பிடவேண்டும். நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த முப்படையினரையும், விடுதலைப்புலிகள் அமைப்பினரையும் எவ்வாறு ஒருமித்துப் பார்க்க முடியும்? நாட்டில் அரசமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருமைப்பாட்டை பாதுகாக்கவே முப்படையினர் போராடினார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பினர் நாட்டுக்கு எதிராகச் செயற்பட்டார்கள்.

முப்படையினரையும், விடுதலைப் புலிகளையும் ஒருமித்துப் பார்க்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தையிட்டு வெட்கமடைகிறேன். ஆகவே நினைவுத் தூபி அமைக்கும் தீர்மானத்தை அரசாங்கம் திருத்திக்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துவேன்.

இலங்கை தேரவாத பௌத்த நாடு என்பதை மறுக்கமுடியாது. நாடு முழுவதும் பௌத்த சின்னங்கள் உள்ளன. இதன் காரணமாகவே இலங்கை பௌத்த நாடு என்று குறிப்பிடுகிறோம். அதனை விடுத்து இனவாத அடிப்படையில் இலங்கை பௌத்த நாடு என்று குறிப்பிடவில்லை - என்றார். (ம)

*கோடை மழையால்*

# பயிர்கள் அழிவு; விலைகள் உச்சம்!

**யாழ்ப்பாணம், மே 25**

யாழ்.குடாநாட்டில் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் திடீரென உயர்வடைந்துள்ளன என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான மரக்கறி வகைகள் யாவும் கிலோ 200 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன. கத்தரிக்காய், பாகற்காய், பயிற்றங்காய், தக்காளிப் பழம் உட்படப் பல மரக்கறி வகைகளின் விலைகள் மும்மடங்காக அதிகரித்துள்ளன. அண்மையில் பெய்த கோடை மழை காரணமாக மரக்கறிப் பயிர்கள் பாதிப்படைந்தமையே இந்த விலையுயர்வுக்குக் காரணமென விவசாயிகள் தெரிவித்தனர். (ச-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டினுள் வந்தது வெள்ளை ஈக்கள் தாக்கம்

## தென்னை அபிவிருத்திச்சபை தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 25**

**யாழ்.குடாநாட்டில் தென்னைகளில் பரவிய வெள்ளை ஈக்களின் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என தென்னை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.**

கடும் வறட்சி மற்றும் வெப்பம் போன்ற காலநிலை மாற்றங்களால் தென்னைகளில் வெள்ளை ஈக்களின் தாக்கம் பரவியது.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள தென்னை மரங்களில் வெள்ளை ஈக்களின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது.

அதனால் தென்னைகளின் உற்பத்தி குறைவடைந்ததுடன் தென்னைகளும் பாதிப்புக்குள்ளாகின.

தென்னை மரங்களை இந்தத் தாக்கத்திலிருந்து கட்டுப்படுத்தும் முகமாக மருந்து விசிறல், தென்னோலைகளில் நீர் விசிறிக் கழுவுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை தென்னை அபிவிருத்திச்சபை முன்னெடுத்தது.

இந்தநிலையில் கடந்த மழையைத் தொடர்ந்து இந்தத் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது என தென்னை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது. (ச-17)




# வீதிப்பாதுகாப்பு வாரம் விழிப்புணர்வுப் பேரணி

வவுனியா.மே.25

வீதிப்பாதுகாப்பு வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களால் விழிப்புணர்வுப் பேரணி வவுனியாவில் நேற்றுப் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஆ.லோகேஸ்வரன் ஆலோசனையில் பாடசாலை வீதிப்பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது.

விழிப்புணர்வுப் பேரணி பாடசாலை முன்றிலில் ஆரம்பமாகி வவுனியா மணிக்கூட்டுச் சந்திவரை சென்று அங்கிருந்து பாடசாலையை வந்தடைந்தது.

பேரணியில் வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன், பாடசாலை அதிபர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் பங்கேற்று பொதுமக்களின் பயணத்தைப் பாதுகாப்பான பயணமாக உறுதிப்படுத்த நாமும் பங்காளியாவோம் என வலியுறுத்தினர். (ச-110)

### உயிர்கொல்லி ஹெரோய்ன்

# சில்லறையாக விற்பனை மன்னாரில் ஒருவர் கைது

மன்னார், மே 25



நீர்கொழும்பிலிருந்து மன்னாருக்கு உயிர்கொல்லி ஹெரோய்னை எடுத்து வந்து சில்லறை விற்பனைக்காக உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய உயிலங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் அடம்பன் வீதியில் வைத்து குறித்த நபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 30 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் தோட்டவெளியைச் சேர்ந்த 56 வயதுடைய சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் உயிர்கொல்லி ஹெரோய்ன் நீர்கொழும்பிலிருந்து மன்னாருக்கு சில்லறை விற்பனைக்காக எடுத்து வந்தமை தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-60)

# 2 நாள்களின் பின்னும் காய்ச்சல் நீடிப்பின் ஆபத்து

## உடன் மருத்துவமனையை அணுகுக மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மே 25

நாட்டில் தற்போது காய்ச்சலுக்கான அறிகுறிகளுடன் கூடிய பல நோய்கள் பரவி வருகின்றன.

இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் உடன் மருத்துவமனையை நாடவேண்டும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதுதொடர்பில் டெங்குக் கட்டுப்பாட்டு வேலைத் திட்டத்தின் மருத்துவர் லஹிரு கொடித்துவக்கு குறிப்பிடுகையில்,

தற்போது காய்ச்சலுக்கான அறிகுறிகளுடன் கூடிய பல நோய்கள் பரவி வருகின்றன.

இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனையை பெறவேண்டும்.

இரண்டு நாள்களுக்குப் பின்னரும் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபர் மருத்துவமனையை நாடாது தாமதம் ஏற்படுத்தின் உயிராபத்து சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

நோயாளர்கள் உடனடியாக மருத்துவரை அணுகி குருதிப்பரிசோதனைகள் மேற்கொண்டு உடல்நிலை தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தவேண்டும் - என்றார். (ச-இ)




எல்லாப் பெரிய மனுசனுக்குள்ளையும் சின்னத்தனங்களும் நிறைய ஒளிச்சிருக்கத்தான் செய்யுது. வடக்கு மாகாணத்தின்ர ஆளுநர் பதவிக்கு வாறவை அந்தப் பதவி ஏதோ தங்கட வாழ்நாளுக்கும் நிலைக்கப் போகுது எண்டமாதிரித்தான் நடந்து கொள்ளுறவை. இப்ப ஆளுநரா வந்திருக்கிறவாவும், முதல் ஆளுநரா இருக்கேக்க அப்பிடித்தான் இருந்தவா. பிறகு திடீரெண்டு அவாவுக்கே தெரியாமல், புது ஆளுநர் கொழும்பில சத்தியப்பிரமாணம் எடுத்த பிறகுதான் இவா மூட்டை முடிச்சோட வெளியேறினவா. ஆளுநரா இருந்த 'கிளீன் சேவ்' காரர் பாக்கிறதுக்கு வெள்ளையும் சொள்ளையுமா இருந்தாலும், மூட நம்பிக்கைகளில மூழ்கிப் போனவராம். அதால ஆளுநர் பதவியில மாற்றம் வரப்போகுதெண்ட கதை அடிபடத் தொடங்கினவுடனேயே, அவர் பில்லி சூனியம் வைச்சு அதை நிப்பாட்டி, ஆயுளுக்கும் தானே ஆளுநரா இருக்கலாம் எண்டு திட்டம் போட்டிருக்கிறார். அதாலதான் 'பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண இந்திய நிறுவனங்களோட ஒப்பந்தம் போடப்போறன்' எண்ட பேரில கேரளாவுக்கு ஓடிப்போய், அங்க உள்ள மாந்திரீகர்மாரிட்ட மந்திரிச்ச தண்ணி வாங்கிக் கொண்டந்து, தன்ர ஒப்பீஸில வச்சிருக்கிறார். இத்தனைக்கும் அவர் இந்தியாவுக்குப் போனது சனத்தின்ர காசில. ஆனால் அவர் இந்தியாவுக்கு என்ன காரணத்தைச் சொல்லிப்போட்டுப் போனாரோ, அதின்படி ஒரு நிறுவனம் கூட வடக்கு மாகாண அபிவிருத்தி சம்பந்தமா ஒரு ஒப்பந்தமும் போடேலை.

காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதையா, இவர் மந்திரிச்ச தண்ணியை இந்தியாவில இருந்து கொண்டந்து வச்சதும், கொழும்பில அரசியல் குழப்பங்கள் கூடினதால, ஆளுநர் பதவி மாற்றம் எண்ட விசயத்தை ரணிலார் தள்ளிவைச்சிட்டார். அதால எல்லாமே மந்திரிச்ச தண்ணியின்ர வேலைதான் எண்டு புளுகப்பட்ட 'கிளீன் சேவ்' ஆளுநர், பிறகும் ரண்டு மூண்டு போத்தலில கேரளாவில இருந்து மந்திரிச்ச தண்ணி எடுப்பிச்சிருக்கிறார். பிறகு எல்லாப் போத்தல்களையும் தன்ர ஒப்பீஸைச் சுத்தி வச்சிருக்கிறார். அவ்வளவு போத்தல் மந்திரிச்ச தண்ணியையும் தாண்டி எப்பிடி புது ஆளுநர் வரமுடியும் எண்ட துணிவிலதான், ரணில் பதவி விலகச் சொல்லவும் அதைக் கேளாத மாதிரி இவர் இருந்திருக்கிறார். மேலிடத்தில இருந்து இன்னொரு பெருங்கை 'ஆர் என்ன சொன்னாலும் நீதான் ஆளுநர்' எண்டு நம்பிக்கையும் குடுத்திருக்கு. அதோட பில்லி சூனியக்காரர் சொன்னமாதிரி ஒவ்வொரு நாளும் அந்த நாளுக்குப் பொருத்தமான பச்சை நிறம் இருக்கிற மாதிரித்தான் உடுப்பும் போட்டிருக்கிறார். தான் மட்டுமில்லாமல், தனக்கு 'நெருங்கின' பெண் உத்தியோகத்தரையும் தான் போடுற கலரிலதான் உடுப்பு போட்டுக்கொண்டு வரச் சொல்லுறவராம்.

இப்பிடியெல்லாம் பில்லிசூனிய விளையாட்டுக்கள் காட்டியும் கடைசியில கேரளத்து மந்திரம் கோளாறு செய்துபோட்டுது. அவரே எதிர்பார்க்காத வகையில புது ஆளுநர் பதவியேற்றவுடன, 'கிளீன் சேவ்' ஆளுநருக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. அண்டைக்கு மூண்டு மணிக்கு பெரிய அதிகாரியள் மாரோட போட்டிருந்த மீட்டிங்கையும் நிப்பாட்டிப்போட்டு, மனம் வெறுத்துப்போய் கொழும்புக்குப் போட்டார். எண்டாலும், தன்னை நம்பிக் கழுத்தறுத்த கேரள மந்திரிச்ச தண்ணியை வைச்சு புது ஆளுநருக்குப் பயம் காட்ட நினைச்சு அந்தப் போத்தல்களை தன்ர ரூமில விட்டிட்டுப் போட்டார். புதுசா சத்தியப்பிரமாணம் எடுத்த ஆளுநரின்ர காதுக்கு இப்பிடி 'மந்திரிச்ச தண்ணி' இருக்குது எண்ட கதை போயிருக்குது. வெருண்டு போன புது ஆளுநர் உடனேயே பழைய 'கிளீன்சேவ்' காரரிட்ட அதுபற்றி கேட்டிருக்கிறா. அவரும் அது மந்திரிச்ச தண்ணி தான் என்று பயம்காட்டியிருக்கிறார். அதுக்குப் பிறகுதான் அதுகளை ஐயர் ஒராளை வைச்சு எடுத்து கிடங்கு வெட்டித் தாட்டவையாம். எல்லாம் பதவி படுத்தினபாடுதான் பாருங்கோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சுத்திறன் காண் நிகழ்வு

யாழ்ப்பாணம். மே 25

அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் பேச்சுத்திறன் காண் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு அறிவொளி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு அறிவொளி சன சமூக நிலைய த் தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வண்ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய அதிபர் இரத்தினராஜா ராஜ்கரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, மே 25

தென்மராட்சிப் பிரதேசத்தில் கலாசாரப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மற்றும் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலாசாரப் பேரவை உறுப்பினர்களையும் அனைத்து கலைஞர்களையும் வருகை தருமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ-ரி-9)

## மஹோற்சவம்

சாவகச்சேரி, மே 25

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் கோவில் வருடாந்த பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

இந்தத் திருவிழாவில் ஜூன் மாதம் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மூன்றாம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. பெருந்திருவிழாக் கிரியைகள் அகோர சிவாச்சாரியார் இ.ஸ்ரீராம் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-ரி -9)



# யாழ்.பல்கலைக்கழகத்தில் அருங்காட்சியகம் திறப்பு

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை முதல் பேராசான் கலாநிதி இந்திரபாலாவால் அடித்தளமிடப்பட்ட தொல்லியல் அருங்காட்சியகம், நவீன அருங்காட்சியகமாக நேற்று புதன்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

வரலாற்றுத்துறைத் தலைவர் திருமதி சாந்தினி அருளானந்தம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக கைலாசபதி கலையரங்கில் கலாநிதி இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகத்தின் அறிமுகவுரையை ஓய்வுநிலை சிரேஷ்ட பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் ஆற்றினார்.

கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் மற்றும் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

கலாநிதி இந்திரபாலா தொல்லியல் கண்காட்சியையும் தொல்லியல் அருங்காட்சியக இணையத்தளத்தையும் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

நிகழ்வில், வரலாற்றுத்துறை ஓய்வுநிலை சிரேஷ்ட பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், வரலாற்றுத்துறைத் தலைவர் சாந்தினி அருளானந்தம், பேராசிரியர் மௌனகுரு, ஏனைய பீட பீடாதிபதிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பதிவாளர், பல்கலைக்கழக நிதியாளர், மத்திய கலாசார நிதிய அதிகாரிகள், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ச-125)



# இந்தியா முழுவதும் 'மோடி' மாம்பழம்

புதுடில்லி, மே 25

உத்தரப் பிரதேசத்திலுள்ள ஒருவர் கண்டுபிடித்த பிரதமர் மோடி பெயரிலான மாம்பழம் விரைவில் இந்தியா முழுவதும் விற்பனை செய்யப்பட உள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த உபேந்திரா சிங் என்பவர் அந்தப் பகுதியில் விளையும் புகழ்பெற்ற துஸ்ஸேரி மாம்பழத்துடன் உள்ளூர் மாங்கனிகளை இணைத்து புதிய ரக மாம்பழத்தைத் தயாரித்துள்ளார்.

பிரதமர் மோடியின் பெயரிடப்பட்ட இந்த புதிய மாம்பழ ரகத்துக்கு இந்திய வேளாண் ஆய்வு மையம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தப் புதிய மோடி மாம்பழச் செடி ஒவ்வொன்றும் 1000 ரூபாவுக்கு மேல் இருக்கும் என்று கூறப்படுகிறது.

இந்த ரக பழங்கள் சந்தைக்குப் புதிது என்பதால் இதன் விலையும் சாதாரண மாம்பழங்களை விட அதிகமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. (ச-இ)

### புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மே 25

மல்லாகம் - கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவு உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

தலைவராக வே.லோகராஜன், செயலாளராக ச.கிரிசாந்தன், பொருளாளராக பழனி நிர்மலாதேவி, உப தலைவராக சி.இன்பராசா, உப செயலாளராக நா.கணேசமூர்த்தி, உபபொருளாளர் த.மணிவண்ணன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக இ.தர்மசீலன், ச.சர்வராஜா,ச.கோசலா, நா.சூரியகுமார், தி.கேசவன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும்.

**இடபம்:** அனுகூலமான நாள். முயற்சிகள் சாதகமாகும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். செலவுகள் ஏற்படக்கூடும். வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** :இபுதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். செலவுகள் ஏற்படும். முக்கிய ஆதாயமும் கிடைக்கும். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும்.

**விருச்சிகம் :** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். ஆஞ்சநேயரை வழிபட காரியங்கள் அனுகூலமாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். உடல் ஆரோக்கியம் மேம்படும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை களை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிளைப் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். முக்கிய முடிவு எடுக்க உகந்த நாள். தாயின் விருப்பத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

# நடுவர் சபை அமர்வுகள்

சாவகச்சேரி, மே 25

சாவகச்சேரி பிரதேச மத்தியஸ்தர் சபை அமர்வுகள் எதிர்வரும் 28ஆம் மற்றும் ஜூன் மாதம் 4 ஆம் திகதிகளில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என தவிசாளர் வை. இராசரத்தினம் அறிவித்துள்ளார்.

இந்த அமர்வுகள் முன்பதாக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெற்று வரும் நிலையில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஓ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காக்கிக் கயமைகள்

தனியார் காணிக்குள் வல்வந்தமாக இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரி அமைதிவழியில் எந்தவொரு தரப்புக்கும் இடையூறு இல்லாமல் போராடிய பெண்கள் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள். அந்தக் கட்சியின் பேச்சாளரும் சட்டத்தரணியுமான க.சுகாஷும் கைது செய்யப்பட்டிருந்தார். நீதிமன்றத்தின் கட்டளைக்கு முரணாகச் செயற்பட்டதாக அவர்களைக் கைது செய்ததாக பொலிஸார் கூறியிருந்தனர். பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலேயே நேற்றுமுன்தினம் காலை தையிட்டிப் போராட்டத்தில் பெரும் காடைத்தனம் அரங்கேறியது. போராட்டம் ஆரம்பித்த முதல் நாள் அதாவது திங்கட்கிழமையே பொலிஸாரின் அத்துமீறல் ஆரம்பமாகியிருந்தது. பொலிஸார் நீதிமன்றக் கட்டளையைப் போராட்டக்களத்தில் வாசித்துக்காட்டினர். விகாரையின் வழிபாட்டுக்கோ, விகாரைக்குச் செல்வதற்கோ இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்று நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது. அதற்கு அமைவாக போராட்டக்காரர்கள் தமது போராட்டத்தை நேற்றுமுன்தினம் அமைதியான முறையில் முன்னெடுக்கத் தயாராகினர். அங்கு வந்த பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான கும்பல், தனியார் காணிக்குள் யாருக்கும் இடையூறுகள் எதுவும் செய்யாமல் போராடத் தயாரான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் மீது மிக மோசமான தாக்குதலை மேற்கொண்டது. அவர்களைத் தள்ளி விழுத்தி அங்கிருந்த பொருள்களை அகற்றி, போராட்டக்காரர்களை மிலேச்சத்தனமாக கைது செய்துகொண்டு சென்றனர். அமைதியாகப் போராடத்தயாரானவர்களை, பொலிஸார் அமைதியைக் குலைத்து கைது செய்தனர். இவை எல்லாவற்றுக்கும் அப்பால் பொலிஸார் ஊடகங்களுக்கும் புதிய சட்டங்களைப் பிறப்பித்தனர். நாட்டில் போர் இருந்த போதுகூட இல்லாத சட்டங்களை எல்லாம் அவர்கள் கற்பித்தனர். போராட்டக்களத்தில் நடக்கும் விடயங்களை செய்தி சேகரிப்பதற்குக் கூட பொலிஸார் அனுமதிக்கவில்லை. பொலிஸார் தங்கள் அதிகார வரம்பை மீறி, பட்டவர்த்தனமாகச் செயற்பட்டனர். தம்மை எவராலும் தட்டிக்கேட்க முடியாது என்ற இறுமாப்பிலேயேஅவர்களின்செயற்பாடுகள்அமைந்திருந்தன.

இந்த இடத்தில் உயர் நீதிமன்ற நீதியரசர் யசந்த கோதாகொட, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் சிவில் போராட்டங்களின்போது பாதுகாப்புத் தரப்பினர், பொலிஸார் பின்பற்றவேண்டிய வழிகாட்டல் கோவை வெளியீட்டு நிகழ்வில், 'ஆட்சியாளர்களின் கொள்கைகள் ,செயற்பாடுகளுக்கு எதிராக தமது பிரதிபலிப்புக்களைச் செய்யவேண்டிய தேவை மக்களுக்கு காணப்படலாம். எதிர்ப்பு நடவடிக்கை என்பது அடிப்படை உரிமைகளான பேச்சுச் சுதந்திரம், கருத்து வெளிப்படுத்தும் உரிமை, அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரம் என்பவற்றின் ஊடாக மக்கள் தமது அபிலாஷைகளை அடைவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளாகும். பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் எதிர்வினை சட்டபூர்வமானதாகவும், நம்பிக்கையுடனும் இருக்கவேண்டும். நியாயமான விமர்சனங்கள் மற்றும் ஏனைய விமர்சனங்களை அடக்குவதற்காக அரசியல் நோக்கங்களுக்காக இயங்கக்கூடாது' – என்று அவர் இடித்துரைத்திருந்தார்.

ஆனால், பலாலிப் பொலிஸாரோ அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரத்தைப் பறித்தெடுத்து மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த முடியாமல் நசுக்கியிருக்கின்றனர். இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீன செயற்பாடுகளுக்கும் அவர்கள் இடையூறு விளைவித்திருக்கின்றார்கள். ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ், கைது செய்யப்பட்டவர்கள் பலாலிப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்ட சில மணி நேரங்களிலேயே அங்கு சென்றுள்ளார். கைதானவர்களை இப்போது பார்வையிடமுடியாது என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முட்டுக்கட்டைபோட்டுள்ளார். நீண்ட வாக்குவாதத்தின் பின்னரே அவரைப் பார்வையிட அனுமதித்துவிட்டு, அவர் கைதானவர்களுடன் பேசுவதை கைத்தொலைபேசியில் வீடியோவும் பதிவு செய்துள்ளார்.

இவ்வாறு காக்கிச்சட்டைக்குள்ளிருந்து கயமையோடு செயற்பட்ட அனைவரும் பணி நீக்கம் செய்யப்படவேண்டும். அதற்கான குரல்கள் ஓங்கிஒலிக்கவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

"பல ஆயிரம் ஆண்டுகளாக மனிதச் சமூகம் வாழ்ந்தாலும், பகைமையின்றி இன்னும் வாழக் கற்றுக்கொள்ள வில்லை"

— ஜே.கிருஷ்ணமூர்த்தி




கனடாவில்

# இனப்படுகொலைத் தூபி தூதரகம் கடும் எதிர்ப்பு

கொழும்பு, மே 25

**கனடாவில் தமிழர் இனப்படுகொலை நினைவுத் தூபியை அமைக்கும் முயற்சிகளுக்கு கனடாவுக்கான இலங்கைத் தூதரகம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.**

இலங்கைப் போரின்போது கொல்லப்பட்ட தமிழர்களை நினைவுகூருவதற்காக கனடாவில் உள்ள இலங்கைத் தமிழ்ச் சமூகத்தினர் நினைவுத்தூபியை அமைப்பதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கே இலங்கைத் தூதரகம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் எதிர்ப்பையும் மீறி, பிரம்ப்டன் மேயர் பட்ரிக் பிரவுன் இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது இறந்த உயிர்களை நினைவுகூருவதற்கான தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-இ)

# ஜஸ்ரின் ட்ரூடோவினது கருத்து அரசியல் அனுதாபத்துக்கானது

## சரத் வீரசேகர கொக்கரிப்பு

கொழும்பு, மே 25

கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர்களின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ளும் அரசியல் நோக்கத்துடன் கனடாப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இலங்கை தொடர்பில் தவறான கருத்தைத் தெரிவித்துள்ளார். ஈழத் தமிழர்கள் தொடர்பில் அவருக்கு உண்மையில் கரிசனை இருக்குமாயின் கனடாவில் ஈழத்தை அமைத்துக் கொள்ளலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராச்சியத்தை வீழ்த்தும் வகையில் செயற்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பை, நாட்டுக்காகவே முடிவுக்குக் கொண்டு வந்தோம். டயஸ்போராக்கள் மனித உரிமைகள் என்ற போர்வையில் விடுதலைப்புலிகள் அமைப்பின் நோக்கத்தை அடைய முயற்சிக்கிறார்கள்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கனடாப் பிரதமர் வெளியிட்ட கருத்து முற்றிலும் தவறானது. அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்தியே அவர் இவ்வாறான கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் புலம்பெயர் தமிழர்கள் வளம் பெற்றுள்ளார்கள். இவர்களின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே கனடாவின் பிரதமர் இலங்கை தொடர்பில் முறையற்ற கருத்தைத் தெரிவித்துள்ளார். இலங்கையைக் காட்டிலும் கனடா பெரியளவு நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. ஈழத்தமிழர்கள் தொடர்பில் கனடாவின் பிரதமருக்கு உண்மையில் கரிசனை, அக்கறை காணப்படுமாக இருந்தால் கனடாவில் ஈழத்தை அமைக்கட்டும் - என்றார். (ம-இ)

**நாளை** 26.05.2023 வெள்ளிக்கிழமை வைகாசி 12

சுபநேரம் : 05.52 - 07.22
ராகுகாலம் : 10.22 - 11.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எவரெஸ்ட் சிகரத்தில் ஈழத்தமிழர் கால்தடம்

வொஷிங்டன், மே 25

எவரெஸ்ட் சிகரத்தில் முதன்முறையாக ஈழத்தமிழர் ஒருவர் ஏறிச் சாதனை புரிந்துள்ளார். யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த விவேகானந்தன் துஷ்யந்தன் என்பவரே கடந்த 18ஆம் திகதி எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிச் சாதனை புரிந்துள்ளார்.

எவரெஸ்ட் சிகரத்தின் 8ஆயிரத்து 849 மீற்றர் உயரத்தில் தனது கால்தடத்தை பதித்துள்ளார். அதன்படி எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதலாவது ஈழத்தமிழர் என்ற பெருமையை துஷ்யந்தன் பெற்றுள்ளார். (ச-6)

# அமெ. விண்வெளி ஆய்வுப் போட்டியில் கவனத்தை ஈர்த்த ஈழத்தமிழ் மாணவன்



யாழ்ப்பாணம், மே 25

ஈழத்தமிழ் மாணவன் ஒருவன் அமெரிக்க விண்வெளி நிறுவனமொன்றின் போட்டியில், வெற்றிபெற்று கவனமீர்த்துள்ளார்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவில் கல்வி கற்றுவரும் ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திரகுமார் அர்ச்சிகன் என்ற மாணவனே இவ்வாறு அமெரிக்க நிறுவனத்தின் போட்டியில் சாதனை படைத்துள்ளார்.

விண்வெளியில் மனிதர்களைக் குடியமர்த்தும் போது பின்பற்றவேண்டிய அறிவுசார் நுட்பங்களை உள்ளடக்கி, அவரது சிந்தனையில் உருவான செயற்றிட்டம் வெற்றிபெற்றுள்ளதாக போட்டியை நடத்திய நிறுவனம் அறிவித்துள்ளது. உலகம் முழுவதும் 19 நாடுகளில் இருந்து 26 ஆயிரத்து 725 பேர் பங்கேற்ற நிலையில், ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திரகுமார் அர்ச்சிகன் அனுப்பிய செயற்றிட்டத்தை அந்த நிறுவனம் அங்கீகரித்து, அவரை வெற்றியாளராக அறிவித்துள்ளதோடு, அமெரிக்காவில் உள்ள ரெக்ஸாஸ் மாநிலத்தில் இந்த மாதம் இடம்பெறும் அறிவியல் மாநாட்டுக்கும் அவர் அழைக்கப்பட்டுள்ளார். (ம)

# தமிழ்த் தலைவர்கள் பலரே இனவாதத்தை விதைத்தனர்!

## அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, மே 25

**பாரம்பரிய தமிழ்த் தலைவர்கள் தமது அதிகாரத்தை இழந்தபோது இனவாதத்தை விதைத்தனர் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.**

குருநாகலில் இடம்பெற்ற இராணுவத்தினரின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல ஆண்டுகளாக அரசியல்வாதிகள் நாட்டில் இனவாதத்தை விதைத்துள்ளனர். பாரம்பரிய தமிழ்த் தலைவர்கள் தமது அதிகாரத்தை இழந்தபோது இனவாதத்தை விதைத்தனர். தமிழ்த் தலைவர்கள் மாத்திரமன்றி தென்னிலங்கைத் தலைவர்களும் இனவாதத்தை விதைத்துள்ளனர். தற்போதுள்ள பொருளாதார அமைப்பு, சமூக மற்றும் அரசியல் கலாசாரத்தை மாற்றுவது நாம் எதிர்கொள்ளும் சவாலாகும். நாடு எதிர்கொண்டுள்ள பேரழிவு கடந்த ஆட்சியாளர்களால் ஏற்பட்ட ஒன்று. இந்த நிலையை மாற்ற உறுதியுடன் நாம் தலையிட வேண்டும்' - என்றார். (ம)

# கிடப்பிலுள்ள சீன ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்த முன்வருக!

கொழும்பு, மே 25

சீன முதலீட்டு நிறுவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பல கிடப்பில் போடப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இலங்கை முன்வரவேண்டும் என பீஜிங்கிலுள்ள இலங்கை தூதரக அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார். டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய தகவலில் அவர் இந்தவிடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

கொழும்பு போர்ட் சிற்றியில் 500 மில்லியன் டொலர் முதலீட்டில் நிதி நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க சீன துறைமுக நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 200 மில்லியன் டொலர் முதலீடு செய்ய ஹுனான் கட்டுமான நிறுவனம் உத்தேசித்துள்ளது.

நகரப்பகுதியில் பல மில்லியன் டொலர் முதலீட்டில் இலகு ரயில் சேவை ஒன்றை ஆரம்பிக்க சீன ரயில்வே நிறுவனம் திட்டமிட்டுள்ளது. உயர்தொழில்நுட்ப பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்க சீனாவின் பைபர் ஹோம் நிறுவனம் முன்வந்துள்ளது. வுஹான் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சர்வதேச தரம் வாய்ந்த உயர்தொழில்நுட்ப பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்க சீன கிரேட்வால் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

அத்துடன் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தியுடன் விமானத் துறையில் முதலீடு செய்வதற்கு பல நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளன. உல்லாசப்பயணத்துறையிலும் விடுதிகள் போன்றவற்றை நிர்மாணிப்பதற்கும் பல நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளன.

கொரோனாத் தொற்று, அரசியல் ஸ்திரமின்மை போன்ற காரணங்களால் இந்தத் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இலங்கையுடன் முதலீடு செய்யத் திட்டமிட்ட நிறுவனங்கள் பல தனது திட்டத்தை வேறு நாடுகளில் முதலீடு செய்ய முயல்கின்றன.

எனவே, தமது திட்டங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்த ஆர்வமாக உள்ள சீன நிறுவனங்களுடனான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள இலங்கை முன்வரவேண்டும் - என்றார். (ச-6)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு சரத்பொன்சேகா தயாராம்

கொழும்பு, மே 25

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு ஐக்கிய மக்கள் சக்தி தனக்கு அழைப்பு விடுத்தால் அதை ஏற்கத் தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு எனக்கு இதுவரை யாரும் அழைப்பு விடுக்கவில்லை. இப்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்றால் உங்களைப் போன்ற ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டும் என்று என்னைச் சந்திப்பவர்கள் சொல்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சேர்ந்து நான் இப்போது அரசியல் செய்கிறேன். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு அதற்குள் இருந்து அழைப்பு வந்தால் ஏற்றுக்கொள்வேன்.

இந்த நாடு பொருளாதார ரீதியில் சீரழிவதற்குக் காரணம் ஊழல்மோசடிகள்தானே தவிர பொருளாதார நிபுணர்கள் அல்லர். ஊழல் மிக்க அரசியல்வாதிகளும் அவர்களின் ஆதரவு பெற்ற ஊழல்மிக்க வர்த்தகர்களுமே இந்த நாட்டைச் சீரழித்தனர்.

இவர்களிடமிருந்து நாம் நாட்டைப் பாதுகாக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கினார் என்பதற்காக இந்த நாடு முன்னேறிவிடாது - என்றார். (ஒ-22)

# போராளி ஒருவருக்கு ஆயுள் தண்டனை!

## கொழும்பு மேல் நீதிமன்று தீர்ப்பு

கொழும்பு, மே 25

கொழும்பில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்துவதற்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதாகிய விடுதலைப்புலிகள் அமைப்பின் போராளி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

தங்கவேலு நிமலன் என்பவருக்கே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு இரத்மலானையில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்துவதற்காக வெடிபொருள்கள் மற்றும் 2 மைக்ரோ ரக கைத்துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பிரதிவாதிக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தார்.

நீண்டகால விசாரணையின் பின்னர் பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி அரசுத் தரப்பால் நிரூபிக்கப்பட்டதையடுத்து அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். அதற்கமைய குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பிட்டுள்ளார். (ச-இ)

# ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதி 18.7% வீழ்ச்சி!

கொழும்பு, மே 25

இந்த வருடத்தின் மே மாதம் 19 ஆம் திகதி வரை, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 18.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில், இலங்கை ரூபாவின் பெறுமதி பல வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதல்களைத் தணிப்பதில் ஊடகங்கள் முட்டுக்கட்டை

## இலங்கை தேசிய சமாதானப் பேரவை ஆதங்கம்

**மன்னார், மே 25**

**ஊடக நுண்ணறிவில் மனித சமூகத்துக்கு அறிவூட்டும் காலகட்டத்தில் உள்ளோம். அந்தவகையில் எல்லாத் துறைகளிலும் வியாபித்துள்ள ஊடகங்கள் சமாதானத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புவதில் தடைக்கல்லாக அமையக்கூடாது. இவ்வாறு இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் எம்.உவைஸ் தெரிவித்தார்.**

இலங்கை தேசிய சமாதானப் பேரவையால் அண்மையில் நடத்தப்பட்ட சமூக ஊடகங்கள் மற்றும் ஊடகம் சார்பான சர்வ மதக் குழுக்களுக்கான பயிற்சி நெறி அமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைத்ததாவது:

நாட்டில் நாம் சமாதானத்துக்காக பணியாற்றுவதோடு சமய சகவாழ்வுக்காக உழைக்கும் ஒரு சர்வ சமயக் குழுவாக இயங்கி வருகின்றோம். இந்தப் பணியில் ஒரு சவாலாகவும் முட்டுக்கட்டையாகவும் ஊடகங்கள் விளங்குகின்றன.

எமது நாட்டில் சமய மோதல்கள் இடம்பெற்றபோது சில ஊடகங்கள் செயற்பட்ட விதங்களை நாம் அறிந்தோம்.

ஊடகங்கள் பக்கச்சார்பின்றி செய்திகளை மனித சமூகத்துக்கு கொண்டு செல்லவேண்டும். மோதல்களைத் தவிர்க்க வேண்டும். மாறாக கசப்பான செய்திகளால் மதங்களுக்கிடையே மோதல்களை தூண்டிவிடுவதாக அமையக்கூடாது.

ஊடக நுண்ணறிவு அல்லது ஊடக பகுத்தறிவுகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டியது தற்பொழுது அவசியமாகின்றது. ஊடகநுண்ணறிவில் நாங்கள் இந்த மனித சமூகத்துக்கு அறிவூட்டும் காலகட்டத்தில் இருக்கின்றோம்.

ஊடக தர்மம் தொடர்பாக பாடசாலை கல்வியில் மாணவர்களுக்கு கற்பித்து தெளிவூட்ட வேண்டும்- என்றார். (ச-60)

# 61 டெங்கு நோயாளர்கள் மன்னாரில் அடையாளம்

டெங்குநோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நாளை 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை தீவிர கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு அதிகாரி மருத்துவ கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் தெரிவித்தார்.

டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் 22ஆம் திகதி திங்கட்கிழமை மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்றது.



நாட்டில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துச் செல்லும் நிலையில் இந்த ஆண்டில் இதுவரையில் மாத்திரம் மாவட்டத்தில் 61 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்படும் என்று இந்தக் கலந்துரையாடலில் மருத்துவ கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் குறிப்பிட்டுள்ளார். (ரி-60)

# முல்லையில் மாடுகள் கடத்தல்: பிரதேசவாசிகளால் முறியடிப்பு

முல்லைத்தீவு, மே 25

புதுக்குடியிருப்பு கைவேலியில் மக்களின் வாழ்வாதார மாடுகளை களவாட முயன்ற இருவர் பிரதேசவாசிகளிடம் வசமாக சிக்கியதையடுத்து அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு சிவநகர் உள்ளிட்ட பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரமாகக் காணப்படும் மாடுகள் அண்மைக்காலத்தில் களவாடப்படுவதுடன் இறைச்சியாக்கி விற்பனை செய்யப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

இதுவரை 10 குடும்பங்களின் கால்நடைகள் காணாமற் போயுள்ளன என அந்தப் பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் கைவேலி பகுதியில் மாடுகளை களவாக வாகனத்தில் ஏற்றி கடத்திச் செல்ல முயன்ற இருவரை பிரதேசவாசிகள் கையும் களவுமாகப் பிடித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அத்துடன் மாடுகளை ஏற்றப் பயன்படுத்திய வாகனமும் மற்றும் இரண்டு மாடுகள் என்பனவும் ஒப்படைக்கப்பட்டன. புதுக்குடியிருப்பு பொலிஸார் சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-19)



# மின்மோட்டர் திருட்டு; இடைத்தரகர் கைது!

யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டையில் திருட்டுப் போன மோட்டருடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். ஆனைக்கோட்டை முள்ளியில் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த நீரிறைக்கும் மின் மோட்டர் களவாடப்பட்டுள்ளது என கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய மேற்கொண்ட விசாரணையில் அதேபகுதியைச் சேர்ந்த ஒருவர் மின்மோட்டரை விற்பனை செய்தமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து சந்தேகநபரை கைதுசெய்து மேற்கொண்ட விசாரணையில் சந்தேகநபர் இடைத்தரகராகவே செயற்பட்டமை தெரியவந்தது. அதனடிப்படையில் பிரதான சந்தேகநபரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

# முல்லைத்தீவுக் கடலில் ஒளிபாய்ச்சி மீன்பிடி; 12 மீனவர்கள் கைது!

முல்லைத்தீவுக் கடலில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 12 கடற்றொழிலாளர்களை நாயாறு கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய முல்லைத்தீவு கடற்பரப்பில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது அவர்கள் சிக்கினர். சந்தேகநபர்கள் மூன்று படகுகளில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கைதுசெய்யப்பட்ட மீனவர்களையும் படகுகளையும் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் கடற்படையினர் சட்டநடவடிக்கைக்காக ஒப்படைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மயிலிட்டி உபஅலுவலகம்**

விண்ணப்பதாரரின் பெயர் :- அருளானந்தம் வரதராஜ்
முகவரி : பல்லப்பை, கட்டுவன் மயிலிட்டி வீதி,
வீரமாணிக்கன்தேவன்துறை, மயிலிட்டி.

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 05, ஆதன இல 14, மயிலிட்டி கட்டுவன் வீதியில் அமைந்துள்ள மயிலிட்டி கோவிற்பற்றும் இறையுமான பள்ளப்பை என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமைகோருபவர் குட்டியன் என்ற பெயரில் ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திருமதி சிப்கா கருணாநிதி முகதாவில் நிறைவேறிய 91/12.07.2020 இலக்கத்தில் முடிந்த வெளிப்படுத்தல் உறுதி மூலம் நிலப்பரப்பு 01 அளவுடைய ஆதனத்தை அருளானந்தம் கைம்பெண் தவபாக்கியம் என்பவர் தனது பெற்றோரான விநாயகர் துரைச்சாமி என்பவரால் நெடுங்காலத்திற்கு முன் நன்கொடையாக வழங்கப்பட்டதாகவும் நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தினால் அழிவடைந்து போய் விட்டதனால் வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனது சொந்த ஆதனமென் வெளிப்படுத்தியுள்ளார். பின்னர் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி சிப்கா கருணாநிதி முகதாவில் நிறைவேறிய 166 / 04.05.2021 இலக்க உறுதி மூலம் தனது மகனான அருளானந்தம் வரதராஜ் என்பவருக்கு நன்கொடையளித்தார்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி கோவிற்பற்றும் இறையுமான பள்ளப்பை உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் V.தவராஜா அவர்களின் 2724/ 27.01.2021 இலக்க நிலஅளவைப்பட வரைபடத்தில் துண்டு 01 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 01 குழி 07.6. இதன் எல்லைகள்

கிழக்கு - கட்டுவன் மயிலிட்டி வீதி
வடக்கு - வெள்ளவாய்க்கால்
மேற்கு - இரத்தினம் இரத்தினசோதியின் ஆதனம்
தெற்கு - நடராசா சிவனேசனின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை அருளானந்தம் வரதராஜ் என்ற பெயரில் ஆதன உரிமைமாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரிற்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.


**சு.சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை.**

(cs 50552) (N-1)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சின்னத்தம்பி பொன்னம்பலம்** (மகாலிங்கம்)

(கார் உரிமையாளர் - பஸ்தரிப்பு நிலையம் - சுன்னாகம்)



தோற்றம் 13.09.1947 மறைவு 20.05.2018

[திதி: பூர்வபக்க ஷஷ்டி]

ஆண்டுகள் ஐந்து ஓடிப்போனது
ஆறாத துயர் மட்டும்
இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும்
நீங்காத நினைவுகளும்
அலை கொண்டு போனாலும்
அப்பா எங்களோடு தான்
வாழ்ந்திடுவாய்!
வருடங்கள் பலவானாலும்.


என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

ஏழாலை மேற்கு, சுன்னாகம்,
(விதுஜா கூல் ஸ்பொட்)
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.

(cs.10971) (2-6)

# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 . 12 . 1929



மறைவு 31 . 05 . 1998

**உயர்திரு. சுப்பிரமணியம் ஞானானந்தராஜா**

(இளைப்பாறிய தலைமைப் புகையிரத நிலைய அதிபர்)

திதி:- வைகாசி வளர்பிறை சஷ்டி

ஆண்டுகள் இருபத்தைந்து ஆயினும்
நம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவுகள்


என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

இல.20, முதலாவது லேன்,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(CS/.50551)AH-1

# முதலாம் வருட நினைவலைகள்

உதிப்பு 14 . 06 . 1951



உதிர்வு 05 . 06 . 2022

**அமரர் சுப்பிரமணியம் தங்கவடிவேலு**

அப்பா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவே!
ஆசைமுகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெல்லாம் மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம் முடியவில்லை!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகின்றோம்
எம் குடும்பத் தலைவனே! என்றென்றும் நாம் மறவோம்
இறைவன்தாள் மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்

திதி:- சஷ்டி
(25.05.2023)

நினைவில் வாடும்....
மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

கிளான்,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

(CR/39892)AH-1

## கேள்வி அறிவித்தல் - திருத்தம்

**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு,
வட மாகாணம்.**

24.05.2023 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 07 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட எமது கேள்வி அறிவித்தலின் 07ஆம் பந்தியின் 06.05.2023ம் திகதி என்பது 06.06.2023 ஆகவும் 08 ஆம் பந்தியின் 07.05.2023ம் திகதி என்பது 07.06.2023 ஆம் திகதியாகவும் 10 ஆம் பந்தியின் அட்டவணையில் வேண்டப்படும் கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் மூன்று வேலைகளிற்கும் 20.09.2023 ஆகவும் மாற்றம் பெறுகின்றது என்பதுடன் ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே காணப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

தலைவர்,
பிரதேசசபை பெறுகைக்குழு
புதுக்குடியிருப்பு பிரதேசசபை.
25.05.2023

(CR.39103) (N-1)

# 23ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்...





**சின்னத்துரை கனகசபை**
(இளைப்பாறிய இராணுவ அதிகாரி)

**சிதம்பரப்பிள்ளை விசாலாட்சி**
(பெரியமாவடி)

திதி: 25.05.2023

பல்லாண்டு நகர்ந்தாலும் நம்மை விட்டு அகலாது
உங்கள் நினைவு நினைவுகள் வரும் போது
நிலை குலைந்து போகின்றோம் - உங்களை
நினைக்காத நொடியில்லை

என்றும் உங்கள் நினைவில்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"ஈஸ்வரி இல்லம்"
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(cs.50544) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 07 . 1938



மறைவு 21 . 05 . 2023

## திரு. திருமதி நாகராசா சிவஞானேஸ்வரி

யாழ். புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திரு.திருமதி நாகராசா சிவஞானேஸ்வரி கடந்த (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகராசா அவர்களின் பாசமிகு மனைவியும், நகுலேஸ்வரி (நகுலா - பிரான்ஸ்), விக்னேஸ்வரி (விஜிதா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், டிசம்பரநாதன் (பிரான்ஸ்), ரவிக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தளையசிங்கம் (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் - பிரான்ஸ்), சாந்தசிவரூபி, காலஞ்சென்றவர்களான திருலோகவதி, இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சபாராணி, செல்வரத்தினம், சாந்தலிங்கம் மற்றும் சாந்தகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, மகேஸ்வரி, அருளையா (நாகரத்தினம்) மற்றும் லோகநாதன் (பாலன்) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான கனகரெட்ணம், நடேசபிள்ளை மற்றும் விமலாதேவி, பவானி ஆகியோரின் அன்பு சகலியும், ஸ்ரிபனி - ஸ்ரீபன், தட்சினி - யஜிந்தன், குருராம் - ஜீவிஸா, சிவாகினி -சிவகரன், டானியல் பாவிட், ஜோனார்த்தன் - கஜிதா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், பிரணிதா, கவின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2023) வியாழக்கிழமை காலை 7.00 - 11.00 மணிவரை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 12.30 - 1.30 மணியளவில் புங்குடுதீவிலுள்ள அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11/8, பண்டாரகுளம் மேற்கு ஒழுங்கை,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(cs.50547) (N-1)

தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டத்தில் அனர்த்த அபாயத் தணிப்பு!

கொழும்பு, மே 25

யாழ். மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகளைமையப்படுத்திஉள்ளூர் இடர் அபாயத்தணிப்புசெயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளன. ஒரு பிரதேசத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள், அவை ஏற்படமுன் அதற்குத் தேவையான முன்னாயத்த செயற்றிட்டங்கள், அதற்கானநிதியை அடையாளம் காணல், புவியியல் ரீதியான அனுமதிகள், மத்தியினூடாகநிதியை செயற்றிட்டத்துக்குப்பெறல், அடையாளப்படுத்தப்பட்ட செயற்றிட்டத்துக்கு பிரதேசசபையின் ஒதுக்கீடுகள் என்பனவற்றை மத்தி, மாநிலம் இணைந்துமுன்னெடுத்தல்என்பன இந்தச்செயற்றிட்டத்தின் பிரதான பணிகளாகும்.

குறித்த இடர் அபாயத் தணிப்பின் முதலாவது செயற்றிட்டம்யாழ். மாவட்டத்தின் நெடுந்தீவு பிரதேசசபையில் அண்மையில் இடம்பெற்றது. தொடர்ச்சியாகயாழ். மாவட்டத்தில் உள்ள 16 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

# சட்டவிரோதமாக மரக்குற்றிகள் வைத்திருந்தவருக்குத் தண்டம்

*யாழ்ப்பாணம், மே 25*

*பாலை மற்றும் முதிரை மரக்குற்றிகளைசட்டவிரோதமாகவைத்திருந்தவருக்கு சாவகச்சேரி நீதிவான்நீதிமன்றால்கடந்ததிங்கட்கிழமை15ஆயிரம்ரூபாதண்டம் விதிக்கப்பட்டுள்ளது.*

*எழுதுமட்டுவாழிலுள்ளமரக்காலையில் பாலை மற்றும் முதிரை மரக்குற்றிகள்சட்டவிரோதமாக பதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைவாக அவர்கள் அங்கு சென்றனர். அங்கிருந்த பாலை மற்றும் முதிரைக் குற்றிகளைக் கைப்பற்றினர்.*

*இவற்றை சட்டவிரோதமாக உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டை சந்தேகநபர் ஏற்றுக்கொண்டதையடுத்து அவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஒ-125)*




# குடிநீரில் மலக்கழிவு; சிறுமி பரிதாபச்சாவு!

கொழும்பு, மே 25

கம்பளை தொலுவ பிரதேசத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்தும்குடிதண்ணீரில்மலக்கழிவுகலந்துள்ளமைதொடர்பில்உடன்சட்டநடவடிக்கை எடுக்குமாறு மாகாண ஆளுநர் பணித்துள்ளார்.

கம்பளைதொலுவபிரதேசமக்கள்பயன்படுத்தும் 31நீர் ஆதாரங்களில் மலக்கழிவு கலந்துள்ளதாகக் கம்பளை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதனால்அந்தக்குடிதண்ணீரைப்பயன்படுத்தும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குஉயிராபத்துஏற்பட்டுள்ளது. அத்துடன் அந்தக் குடிதண்ணீரைப் பருகிய 14 வயதுச் சிறுமி வயிற்றுப்போக்குக்காரணமாகஉயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது

மேலும் போகம்பர சிறைச்சாலையின் கழிவுகள் மகாவலிக்குள் கொட்டப்படுவதாகவும், மகாவலியில் உள்ள நீர் பெருமளவு மாசடைந்துள்ளது எனவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இந்தவிடயங்கள் தொடர்பில் வழக்குப்பதிவு செய்து சட்டநடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். (ச-இ)

## தேவை

வாகன உதிரிப்பாக விற்பனையில் முன் அனுபவம் உள்ள ஒருவர் தேவை.

தொடர்பு: 077 179 2577

## எழுதுமட்டுவாழில்...

துன்னாலையைச் சேர்ந்த கிருஸ்ணகுமார் விக்னேஸ்வரன் (வயது-32) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் எழுதுமட்டுவாழ் பகுதியில் உள்ள சோதனைச் சாவடி ஒன்றின் வளைவில் திரும்பியபோது, கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் உள்நுழைய முயன்ற நிலையில் விபத்து நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதில் சிக்கி, மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு சிறுவர்கள் விபத்தில் காயமடைந்த நிலையில், பளை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகப் பளைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-எ-9,113)

## கஜேந்திரன்...

நிலையில், நேற்று தமக்கு கைபேசி தொடர்பாக எதுவும் தெரியாது என்று சாதிக்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

வலி.வடக்கு, தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரையை அகற்றக்கோரி நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அங்கு சென்ற பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அச்சுறுத்தி அகற்ற முனைந்தனர். அந்தச் சம்பவங்களை ஒளிப்படம் எடுத்த ஊடகவியலாளர்களும், கைபேசிகளில் ஒளிப்படம் எடுத்த ஏனையோரும் பொலிஸாரால் மிரட்டப்பட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் கைபேசியை வாங்கி அருகில் நின்ற ஒருவர் இந்தச் சம்பவங்களை காணொலியாகப் பதிவு செய்தபோது, அந்தக் கைபேசி பொலிஸாரால் பறிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் அது தனது கைபேசி என்று உறுதிப்படுத்திய போதும், நீதிமன்றத்தில் வந்து கைபேசியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று பொலிஸார் பதிலளித்தனர். இறுதிவரையில் கைபேசியைக் கொடுக்காது கொண்டு சென்றனர்.

நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 9 பேரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிடம் பறிக்கப்பட்ட கைபேசி நேற்று நீதிமன்றில் பாரப்படுத்தப்படவில்லை. நேற்றுப் பிற்பகல் தனது கைபேசியைத் தருமாறு பொலிஸாரிடம் கேட்டபோது, கைபேசி எதுவும் தங்களிடம் இல்லை என்று பதிலளித்துள்ளனர்.

"எனது கைபேசியைப் பொலிஸார் பறித்துச் சென்றதைப் பலர் பார்த்தனர். கைபேசியைப் பறித்த பொலிஸ் உத்தியோகத்தரை என்னால் அடையாளம் காட்ட முடியும். எனது கைபேசி பொலிஸாரால் திருடப்பட்டுள்ளது" - என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் குறிப்பிட்டார். (எ-26)

## திருக்கேதீச்சர...

உற்சவமூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் பூசைகள் நடைபெற்று, உற்சவமூர்த்திகள் வீதி வலம் வந்து கொடித்தம்பப் பூசைகள் நடைபெற்றன. தொடர்ந்து சுபநேரத்தில் கொடியேற்றம் நடைபெற்றது.

10 நாள்கள் திருவிழா நடைபெற்று தேர்த் திருவிழா எதிர்வரும் முதலாம் திகதியும், தீர்த்தத் திருவிழா எதிர்வரும் 2ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

நேற்றுக் கொடியேற்றத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நாடு முழுவதிலும் இருந்து வந்து கலந்துகொண்டனர்.

(அ-எ-56)

## விகாரைக்கு...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்படப் பலர் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். நேற்று இரவும் தொடர்ச்சியாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(அ-எ-26)

## தொல்லியல்...

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு ஒன்று நடந்துள்ளது. இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தில் நடந்துள்ளது.

வடக்கு - கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தொடர்பான விவரண அறிக்கை ஒன்றை கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பித்த சிறீதரன், அந்த அறிக்கையின் பிரதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் தூதுவர்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டு மனித உரிமை அமைப்புகள் என்பவற்றுக்கு தனித்தனியே அனுப்பியிருந்தார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்த அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே, ஆணைக்குழுவின் பிரதானிகள் இந்தக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். தனியாருக்கோ, மதநிறுவனங்களுக்கோ சொந்தமான காணிகளில் நடைபெறும் ஆக்கிரமிப்புகள் மற்றும் அனுமதியற்ற கட்டுமானங்கள் தொடர்பில் உரிய தரப்பினர் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கின்றபோது, பொலிஸ் முறைப்பாடு செய்தல், வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தல் உள்ளிட்ட வழிமுறைகளையும் கையாளும் பட்சத்தில், இதுவிடயமாக தமது நிறுவனம் சார்ந்து மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என்று இந்தச் சந்திப்பின்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் நீதிபதி ரோகினி மாரசிங்க சுட்டிக்காட்டினார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

(அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம் இல்லையெனில் சர்வதேச விசாரணை தேவை!

## சிறீதரன் வலியுறுத்து

கொழும்பு, மே 25

**இறுதிக்கட்டப் போரில் தமிழர்கள் மீது இனப்படுகொலை கட்டவிழ்த்துவிடப்படவில்லை, இரசாயனக் குண்டுத் தாக்குதல் நடத்தப்படவில்லை என்றால் இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணைக்கு தாராளமாக முகம் கொடுக்கலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


சிங்கள பெரும்பான்மையின அரசாங்கத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இன்றும் இந்த நாட்டில் நீதி கிடைக்கப் பெறவில்லை. நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்ற வேண்டுமாயின் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு அரசமைப்பு ஊடாக தீர்வு வழங்கவேண்டும். நடைமுறையில் உள்ள இனப்பிரச்சினைக்கு சிறந்த தீர்வு கிடைக்காவிட்டால் இந்த நாடு தொடர்ந்து அதலபாதாளத்துக்கு செல்லும் என்பதில் மாற்றமில்லை. 2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததை தொடர்ந்து கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை. கிடப்பில் போடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஆணைக்குழுக்கள். நியமிக்கப்பட்டன. இருப்பினும் எந்த ஆணைக்குழுவாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்கப் பெறவில்லை. உள்ளக பொறிமுறை ஊடாக விசாரணைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயத்தை பெற்றுக்கொடுப்பதாக 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கம் சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கியது. ஆனால், வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. ஆகவே இந்த நாட்டில் நீதி இல்லை. போரில் பாதிக்கப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே வாழ்கிறார்கள்.

போர் முடிவடைந்த 14 ஆண்டு காலங்கள் பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கனடாவின் பிரதமர் குறிப்பிட்ட கருத்தை இலங்கை அரசாங்கம் மறுதலித்துள்ளது. உண்மையைக் கண்டறிவதாக இலங்கை சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கியது. அதனையே சர்வதேசம் இன்று கோருகிறது. போர்க் குற்றம் இடம்பெறவில்லை, தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை என்றால் ஏன் சர்வதேச விசாரணைக்கு அச்சப்பட வேண்டிய தேவையில்லை.

காணாமற் போனார் விவகாரத்துக்கு ஒரு சிறந்த தீர்வை பெற்றுத் தருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். இதனையே ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் அனைவரும் குறிப்பிடுகிறார்கள். இலங்கை ஆட்சியாளர்கள் சர்வதேசத்தை ஏமாற்றுகிறார்கள். இதன் காரணமாக சர்வதேசம் இலங்கையை தொடர்ந்து நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்துகிறது. இலங்கை தொடர்பில் கனடாவின் பதிவுகளை மதிக்கிறோம்.

உள்ளக பொறிமுறையில் தீர்வு கிடைக்காது என்பதற்காகவே தொடர்ந்து போராடுகிறோம். போரால் அழிந்தவர்கள் நாங்கள். எம்மை அழித்தவர்கள் நீதிபதிகளாக இருந்து செயற்படும்போது எவ்வாறு நீதி கிடைக்கும். அழிக்கப்பட்ட எம் உறவுகளை நிம்மதியாக வாழ இடமளிக்காத வகையில் அரசாங்கம் செயற்படுகிறது - என்றார். (ம)



# எட்டுக் கால்களுடன் பிறந்த கன்றுக்குட்டி

## வவுனியாவில் ஆச்சரியம்

வவுனியா,மே 25

வவுனியா-பாலமோட்டை கோவில் குஞ்சுக்குள கிராமத்தில் எட்டுக்கால்களுடன் கன்று ஒன்றை மாடு ஈன்றுள்ளது.

குறித்த கிராமத்தில் வசிக்கும் ஆறுமுகம் ஞனேஸ்வரன் என்பவர் வளர்த்து வரும் மாடொன்றே இந்த அதிசயக் கன்றை நேற்றுப் புதன்கிழமை பிரசவித்துள்ளது.


இந்தக் கன்றுக்குட்டியில் நான்கு கால்களையும் விட முன்பக்கமாக 2 கால்களும் அவற்றிலொருகாலில் இருகால்களுமென மொத்தமாக 8 கால்கள் காணப்படுகின்றன.

இந்த கன்றுக்குட்டி தற்போது ஆரோக்கியமாக உள்ளது என உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

கன்றுக்குட்டியை கிராமமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர். (ச-110)

# வாகன சுத்திகரிப்பு மூலம் நிதி திரட்டிச் சமூகப் பணி

## யாழ். பல்கலை மாணவர்கள் முன்மாதிரி



யாழ்ப்பாணம், மே 25

பொருளாதாரம் நலிவுற்றோருக்கு உதவும் முகமாக கார் மற்றும் மோட்டார் வாகனங்களை சுத்திகரிப்புச் செய்து நிதி திரட்டும் செயற்றிட்டம் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

முகாமைத்துவ மற்றும் வணிக வாரத்தையொட்டி முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட மாணவர் ஒன்றியத்தால் இந்தச் செயற்றிட்டம் இடம்பெற்றது.

நேற்று புதன்கிழமை காலை முதல் யாழ். பல்கலைக்கழக முன்றிலில் கார் மற்றும் மோட்டார் வாகனங்களை பல்கலைக்கழக மாணவர்கள் சுத்திகரிப்பு செய்து நிதிதிரட்டினர். இந்தச் செயற்றிட்டத்துக்கு ஆதரவு வழங்கிய நலன்விரும்பிகளுக்கு மரக்கன்றுகளையும் மாணவர்கள் வழங்கினர்.

மக்கள் பங்களிப்பில் திரட்டப்பட்ட இந்த நிதியை சமூகத்தில் பொருளாதாரம் நலிவுற்ற மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர் ஒன்றியத் தலைவர் த.மீராஜா, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட பீடாதிபதி நிமலதாசன், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் இணைந்திருந்தனர். (ச-125)

# வைகாசி பொங்கல்

யாழ்ப்பாணம்,மே 25

மல்லாகம்.பெரிய நாயகி தாயார் கருமாரி பெரியதம்பிரான் திருக்கோயில் வருடாந்த வைகாசிப் பெரும் பொங்கல் உற்சவம் கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை விளக்கு வைத்தல் வழிபாட்டுடன் ஆரம்பமானது. உற்சவ காடிமனை உற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமையும் தீ மிதிப்புடன் கூடிய பெரும் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிறுக்கிழமையும் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவத்தின் எட்டாம் மடை எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-131)

# தெல். யூனியன் கல்லூரியில் போக்குவரத்து விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், மே 25

வீதிப் பாதுகாப்பு வாரத்தையொட்டி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களால் வீதியோர விழிப்புணர்வு செயற்றிட்டம் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. பொலிஸ் தலைமையகத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு செயற்றிட்டத்தில் வினாடி வினாப்போட்டி நடத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து வீதி விபத்துகள் மற்றும் பாதுகாப்பான வீதிப் போக்குவரத்து ஆகியவை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வீதி நாடகங்களும் நடத்தப்பட்டன.

நிகழ்வில் பொலிஸ் தலைமையகத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் வசந்த, காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கமகே, காங்கேசன்துறை பிராந்திய போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி காரியவசம், தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயபால உள்ளிட்ட போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர் பங்கேற்றனர். (ச-125)



# சாவ.மருத்துவமனையில் கண்புரை பரிசோதனை

சாவகச்சேரி மருத்துவமனையில் நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ள கண்புரை பரிசோதனைக்கான பதிவுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. பதிவுகளை மேற்கொள்ளும் 150 பேருக்கு மாத்திரமே கண்புரை பரிசோதனைகள் யாழ.போதனா மருத்துவமனை கண் சிகிச்சைப் பிரிவினரால் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்.போதனா மருத்துவமனை கண் சிகிச்சை அலகினர், தென்மராட்சி பிரதேசத்திலுள்ள கொடிகாமம், வரணி, கைதடி ஆகிய மருத்துவமனைகளில் கண்புரை பரிசோதனைகளை கடந்த மாதம் ஆரம்பித்து பார்வையில் குறைபாடு காணப்பட்டவர்களுக்கு இலவச சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-9)

# மணவாளக்கோல உற்சவம்

மட்டுவில் வடக்கு அருள்மிகு பனையடிப்பிள்ளையார் ஆலயத்தின் மணவாளக்கோல உற்சவம் இன்று வியாழக் கிழமை காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது. விசேட அபிஷேகங்கள் மற்றும் பூசை வழிபாடுகளுடன் திருவூஞ்சல் பாடலுடன் பிள்ளையார் வீதி வலம் வருதலும் ஆலய பிரதம குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதிப்...

வலி.வடக்கு, தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையை அகற்றக்கோரி நேற்றுமுன்தினம் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பலாலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸாரால் அங்கிருந்து பலவந்தமாக அகற்றப்பட்டதுடன், போராட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்று, பொலிஸாருக்கு கடும்தொனியில் அறிவுறுத்தலும் வழங்கியுள்ளது.

தையிட்டியில் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தினரின் உதவியுடன் அமைக்கப்படும் பௌத்த விகாரைக்கு தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் கையகப்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுவரும் இந்த விகாரையை அகற்றவேண்டும் என்று போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த 3ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டபோது பொலிஸார் அதற்கு இடையூறு ஏற்படுத்தினர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வோம் என்று அச்சுறுத்தி அங்கிருந்து விரட்டியதுடன், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைத்திருந்த கொட்டகைகளையும் பலவந்தமாக அகற்றியிருந்தனர். அதன்பின்னர் இந்த விடயம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, பொது அமைதிக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில் போராட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று நீதிமன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தபோது பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குக் கடும் இடையூறுகளை ஏற்படுத்தினர். போராட்டத்தில் முன்னின்ற நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனை குண்டுக்கட்டாகத் தூக்கி போராட்ட இடத்தில் இருந்து அகற்ற முயன்றனர். 'போராட்டத்தில் ஈடுபட்டனர், போராட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு உணவு கொடுத்தனர், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் உரையாடினர்' என்ற குற்றச்சாட்டுக்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் உட்பட 9 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்திய பொலிஸார், அவர்களை விளக்கமறியலில் வைக்க அனுமதி கோரினர். ஆயினும் அதை நிராகரித்த நீதிமன்றம் 9 பேரும் பிணையில் செல்ல அனுமதித்தது. அத்துடன் பொலிஸார் செயற்பட்ட விதம் தொடர்பாகக் கடும் அதிருப்தியை வெளியிட்ட நீதிமன்றம், பொது அமைதிக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் போராட்டங்கள் மேற்கொள்ள பொதுமக்களுக்கு உரிமை உண்டு என்று பொலிஸாருக்கு இடித்துரைத்தது.

வழக்கு விசாரணைகளின் பின்னர் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி சுகாஷ், இன்று பத்திரிகையொன்றில் (உதயன் நாளிதழின் 'புதினம் தெரியுமோ? பகுதியில்) ஒரு விடயம் வெளியாகியிருந்தது. பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீது ஒரு கொலை வழக்கு மற்றும் 9 மனித உரிமை மீறல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை நீதிமன்றில் சுட்டிக் காட்டினேன். தனியார் காணிக்குள் நின்ற நாடாளுமன்ற உறுப்பினருடன் சட்ட விவகாரம் தொடர்பில் பேசச் சென்றபோதே கைது செய்யப்பட்டேன் என்பதை நீதிமன்றில் குறிப்பிட்டேன்.

சட்டத்தரணிகளும், ஊடகவியலாளர்களும் சம்பவ இடத்தில் இருக்கும்போது பொலிஸார் கவனமாக நடந்துகொள்ள வேண்டும் என்று நீதிமன்றம் பொலிஸாருக்கு அறிவுறுத்தியது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தவும் பொலிஸ் அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது - என்றார். (அ-எ-26)

## ஜூலை...

மன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

உள்நாட்டு மின்சாரக் கட்டணங்கள் குறைந்தபட்சம் 23 வீதத்தால் குறைக்கப்படும். இதனால் பூச்சியம் முதல் 30 அலகுகளுக்கு இடைப்பட்ட வீட்டு உபயோகத்துக்கான மின்சாரக் கட்டணம் 30 ரூபாவில் இருந்து 25 ரூபாவாகக் குறைவடையும். இந்தக் குழுவுக்கான உள்நாட்டு நிலையான கட்டணம் ஜூலை மாதம் முதலாம் திகதியுடன் 400 ரூபா முதல் 250 ரூபாவாகக் குறைக்கப்படும். பூச்சியம் முதல் 30 அலகுகள் வரை பயன்படுத்தும் மதவழிபாட்டுத் தலங்களின் மின்சாரக்கட்டணம் குறைந்தபட்சம் 23 வீதத்தால் குறைக்கப்படும். ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத்துறைகளுக்கு மின்கட்டணம் குறைந்தபட்சம் 43 வீதத்தால் குறைக்கப்படும் - என்றார்.

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஜனக ரத்நாயக்கவை நீக்குவதற்கான பிரேரணை மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே எரிசக்தி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை, மின்சாரக் கட்டணம் அளவுக்கதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னாயக்க பகிரங்கமாக விமர்சித்ததை அடுத்தே, அவரைப் பதவி நீக்க அரசாங்கத் தரப்பு நடவடிக்கை எடுத்திருந்தது. (அ-எ-இ)

## ஜனகவுக்கு...

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக 123 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில், 46 மேலதிக வாக்குகளால் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கான பிரேரணையை எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் சமர்ப்பித்திருந்தார்.

எரிபொருள் விலையேற்றம், மின் கட்டண உயர்வு, மின்வெட்டு போன்ற தீர்மானங்களில் அரசாங்கம் தவறான முடிவுகளை எடுத்துள்ளது என்று ஜனக ரத்நாயக்க கடந்த காலங்களில் விமர்சித்ததுடன், அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு அனுமதி வழங்கவும் மறுத்திருந்தார்.

அரசாங்கம் தேவைக்கு அதிகமாக கட்டணங்களை உயர்த்தி மக்கள் மீது அதிக சுமையைச் சுமத்துகின்றது என்று அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். அதனால் ஜனக ரத்நாயக்கவுக்கும், எரிசக்தி அமைச்சுக்கும் இடையே முறுகல் நிலைமை ஏற்பட்டிருந்தது. (அ-எ-இ)

## ஆசிரியர்...

கல்லூரி ஒன்றில் பயிற்சி ஆசிரியர் ஒருவர் மீது மாணவன் ஒருவன் தாக்குதல் நடத்தியுள்ளான். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

இதே கல்லூரியில் கடந்த ஆண்டு நவம்பர் மாதமும் இந்த மாணவனால் பிரச்சினை ஒன்று ஏற்பட்டு, ஆசிரியர் ஒருவர் மீது மாணவனின் தந்தை தாக்குதல் மேற்கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படாமையாலேயே ஆசிரியர்கள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தப்படக் காரணம் என்றும், இந்தச் சம்பவங்கள் ஆசிரியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

(அ-எ-20)

## நாடாளுமன்றில்...

தங்கம் மற்றும் கைபேசிகளைக் கடத்தி வந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ஹரீம் நேற்று நாடாளுமன்றத்துக்கு சமுகமளித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்துக்கு வந்த அவர் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவரைப் பதவி நீக்கும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார்.

மத்தியகிழக்கு நாடொன்றில் இருந்து நேற்றுமுன்தினம் நாடு திரும்பிய இவர் 3.5 கிலோ தங்கம் மற்றும் 91 கைபேசிகளுடன் கட்டுநாயக்க விமான நிலைய பிரபுக்கள் முனையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு, தண்டம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## போலிச்...

ஒட்டுசுட்டான் - முத்தையன்கட்டு, ஜீவநகரில் போலிச் சாமியார் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரால் பல பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

போலிச் சாமியாரால் ஏற்கனவே ஒரு பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 18 முதல் 20 வயதுடைய மேலும் மூன்று பெண்கள் போலிச் சாமியாரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையை சேர்ந்த சாமியார், பில்லி- சூனியத்தை நீக்குவேன் என்று கூறி முத்தையன்கட்டு, ஜீவநகர் பகுதிக்கு அடிக்கடி வந்துசென்றுள்ளார். கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த இரு பெண்களுக்கு சூனியம் நீக்குவதாகக் கூறி ஜீவநகர் பகுதியிலுள்ள வீட்டுக்கு அழைத்து அங்கு பாலியல் சில்மிஷம் புரிந்துள்ளார்.

யுவதிகள் இது தொடர்பில் தமது பெற்றோரிடம் தெரியப்படுத்தியதையடுத்து, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய ஒட்டுசுட்டான் பொலிஸார் போலிச் சாமியாரைக் கைது செய்ததுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளின் அடிப்படையில் 18 முதல் 20 வயதுடைய மூன்று யுவதிகளை போலிச்சாமியார் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. சூனியம் நீக்குவேன் என்று கூறி மதுபானம் மற்றும் கஞ்சா போன்றவற்றைக் கொடுத்து யுவதிகளை போலிச்சாமியார் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது. பாதிக்கப்பட்ட 3 யுவதிகளும் மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்கள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் போலிச்சாமியாரால் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் நிலையில், பொலிஸார் விசாரணைகளை விரிவுபடுத்தியுள்ளனர்.

(எ-5)

## காலாவதித்...

வியாபார அனுமதியை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யாழ். மாநகர ஆணையாளருக்குப் பரிந்துரைத்துள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதி யாழ். நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ப.சஞ்சீவனுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் யாழ்ப்பாணம் நகர்ப்பகுதிக் கடைகளில் சோதனை முன்னெடுக்கப்பட்டது. காலாவதித் திகதியில் மாற்றம் செய்யப்பட்ட மற்றும் காலாவதியான குளிர்பானங்கள் விநியோகஸ்தரால் கடைகளுக்கு வழங்கப்பட்டிருந்தமை சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இரு கடைகளில் இருந்து இவ்வாறான குளிர்பானங்களைக் கைப்பற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், யாழ்ப்பாணத்தில் உள்ள விநியோகஸ்தர் ஒருவரின் களஞ்சியசாலையில் திடீர் சோதனை நடத்தினர். காலாவதித் திகதியில் மாற்றம் செய்யப்பட்ட ஆயிரத்து 100 குளிர்பானப் போத்தல்கள் விநியோகத்துக்குத் தயார் நிலையில் இருந்தபோது கைப்பற்றப்பட்டன. காலாவதியான குளிர்பானப் போத்தல்களுடன் மொத்தம் ஆயிரத்து 710 குளிர்பானப் போத்தல்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மீட்கப்பட்டன.

அந்த விநியோகஸ்தருக்கு எதிராக யாழ். நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விநியோகம் தொடர்பில் இரு வழக்குகளும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தி.கிருபனால் களஞ்சியசாலைக் குறைபாடுகள் தொடர்பான ஒரு வழக்கும் என மொத்தம் 3 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் விநியோகஸ்தருக்கு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், யாழ்ப்பாணம் மாநகரசபையால் அந்த விநியோகதஸ்தருக்கு வழங்கப்பட்ட அனுமதியை இரத்துச் செய்வதற்கான பரிந்துரையை, 3 வழக்குகளுக்கும் தனித்தனியாக யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு வழங்கியுள்ளது. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவில்

# வறுமையான நாடுகள் பட்டியலில் இலங்கை!

கொழும்பு, மே 25

**ஆசியாவின் 20 ஏழ்மையான நாடுகளில் இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளது என யாஹூ பினான்ஸ் இணையத்தளம் அறிக்கையிட்டுள்ளது.**

வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள், உணவு, சுத்தமான நீர், சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி மற்றும் சமூகசேவைகள் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான அணுகல் உட்படப் பல்வேறு பரிமாணங்களையும் உள்ளடக்கி ஆசியாவிலுள்ள 20 ஏழ்மையான நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வளர்ந்து வரும் ஒரு நாடாக இலங்கை வகைப்படுத்தப்பட்டுள்ளபோதும், தற்போது அதிகரித்துவரும் பணவீக்கம், நாணய மதிப்பிழப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு, மனிதாபிமான அவசர நிலை உள்ளிட்ட பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றது.

2021ஆம் ஆண்டு நிலைவரப்படி தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் ஆசியாவின் ஏழ்மையான நாடுகளில் இலங்கை சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் தரவரிசையில் முதல் இடத்தில் வடகொரியா உள்ளது. இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் ஆப்கானிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் உள்ளன.

இலங்கை 17 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது என யாஹூ பினான்ஸ் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# தகவல்களைக் கோரிய இளைஞரை பொலிஸாக 'மாற்றிய' பிரதேசசெயலகம்

வவுனியா, மே 25

தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் தகவல் கோரிய தன்னை பொலிஸ் எனக் கூறி பிரதமர் அலுவலகத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், வவுனியா பிரதேசசெயலகத்தின் செயற்பாட்டால் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் சூரியகுமார் கிருபன் என்ற இளைஞர் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா, ஓமந்தை அரச வீட்டுத்திட்டப் பகுதியில் 219 பேருக்கு காணி வழங்கவுள்ளதாக வவுனியா பிரதேசசெயலகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான முறைப்பாடுகள் இருந்தால் தெரியப்படுத்துமாறு கோரியிருந்தனர். அதன்போது நான் 219 பேரது விபரம் தொடர்பில் பிரதேசசெயலாளருக்குத் தெரியப்படுத்தியதுடன், 'இதில் ஊழல் நடைபெற்றுள்ளது. ஏற்கனவே காணி உள்ள பலருக்கு கொடுக்கப்பட்டுள்ளது' என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன். அதற்கு எனக்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக பிரதேசசெயலாளரிடம் நேரடியாகத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, சரியான விபரங்கள் இல்லை என்பதால் நேர்முகத்தேர்வு குறித்து எந்த விபரங்களும் தரப்படாதநிலையில் கடிதம் ஒன்று எழுதி பிரதேசசெயலாளருக்கு அனுப்பியதுடன் அதன் பிரதிகளை ஜனாதிபதி, பிரதமர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, ஆளுநர், மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பியிருந்தேன்.

இதன்பின் பிரதமர் செயலகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்தது. இது தொடர்பில் ஆராய்வதாகவும் இது தொடர்பான பதில் பிரதேச செயலகத்தால் தமக்கு வழங்கும் வேளை, தங்களுக்கும் அது அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

அதற்கான பதிலை பிரதேசசெயலாளர் பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளதுடன், அதன் பிரதியை எனக்கும் அனுப்பியுள்ளார். அதில் நான் கேட்ட கேள்விகளுக்கு சம்பந்தமில்லாத பதில்களும் என்னையும், எனது குடும்பத்தாரைப் பற்றிய அவதூறுகளையும் எழுதியிருந்தார். அதில் நான் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் எனக் குறிப்பிட்டுள்ளனர். அந்தக் கடிதம் பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அன்றிலிருந்து எனக்கு ஒரே பிரச்சினை. நான் தனியார் துறையில் வேலை செய்கிறேன். பிரதேச செயலகத்தால் நான் பொலிஸார் எனக் குறிப்பிட்டுள்ளமையால் நான் செல்லும் இடங்களில் என்னை பொலிஸ் புலனாய்வாளர் எனச் சந்தேகிக்கின்றார்கள். என்னால் பொதுமக்கள் மத்தியில் செல்லமுடியவில்லை.

இதனால் எனக்கு மனஉளைச்சலும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் முறையிட்டுள்ளேன் - என்றார். (ம-110)


**Vacancy**
**உடனடி வேலைவாய்ப்பு**
**IMS** Institute of Medical Sciences

- **சுத்திகரிப்பாளர் (Cleaner)**

ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்க முடியும்
வயது :- 25 தொடக்கம் 50 வரை
சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்
Green Memorial Hospital, Manipay
☎ - 0212256990
- 0760477106



DHL உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை



சகல நாடுகளுக்குமான கடிதங்கள், பொதிகள் 3-5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்.
**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
0777 55 45 28



**விசேட விலைக்கழிவு**

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் யாழ். மாவட்ட விநியோக உரிமை முகாவராகிய சிவா நறுமணப் பூங்காவில், ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருள்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் வைத்தியர்கள், வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

021 222 2567
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு.
* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.

தொடர்பு: 077 6385 683
076 7558 606



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 64 பரப்புக் காணி விற்பனைக்கு.
* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில்
* பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 பாதையுடன்
* குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்

தொடர்பு: 076 7390 413
076 4365 814, 077 065 4525



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இளவாலையில் 40 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
* இளவாளையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* இளவாலை சந்தியில் இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.

தொடர்பு: 076 333 6079,
076 733 6093, 076 911 9371



**வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி**

கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் பிளாஸ்ரிக், பான்சி பொருட்கள், அலுமினிய பொருட்கள், சில்வர் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், கிறீம் வகைகள், கவரிங் வகைகள், தையல் உபகரணங்கள், தையலுக்கு தேவையான மொடல் பட்டின்கள், மாபிள் பீங்கான்கள், றெஜிபோம் பெட்டிகள், பாட்டா வகைகள், மாஸ் வகைகள் அன்பளிப்பு பொருட்கள், கிளினர், திரவியங்கள், காண்வோஸ், கொம்போட், வாசனை திரவியம், மாபிள் கிளினர், றூம்ஸ்பிறே, மணிக்கூடு வகைகள் இவை அனைத்தும் 30 வீத கழிவுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சரவணபவன் பான்சி ஹவுஸ்**
26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: தே. கலைத்தாசன் (கரன்) - 021 3155 900




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.